CUMBERLAND
CITY COUNCIL

# சபையின் உறுப்பினர் ஸ்டீவ் கிறிஸ்டோ நகரத் தலைவர்



5 ஜனவரி 2021

அன்புள்ள குடியிருப்பவருக்கு

COVID-19 இன் பரவலைக் கட்டுப்படுத்த உதவும் சுகாதார ஆலோசனையைக் கவனமாகப் பின்பற்றுமாறு கம்பலாந்து நகர சபை குடியிருப்பாளர்களை அறிவுறுத்துகிறது. நீங்கள் அறிந்திருக்கிறபடி, பெராலா, கிரேஸ்டேன்ஸ் மற்றும் ஸ்மித்பீல்ட் ஆகிய புறநகர்ப்பகுதிகள் உள்ளிட்ட எங்களுடைய உள்ளூராட்சிப் பகுதியில் வசிப்பவர்கள் சிலருக்கு வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

NSW அரசாங்கத்தின் சுகாதார உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களைத் தயவுசெய்து பின்பற்றவும். நல்ல சுகாதாரத்தைக் கடைபிடிக்கவும், பெரிய குடும்ப ஒன்றுகூடல்களைத் தவிர்க்கவும், உங்களை, உங்கள் குடும்பம் மற்றும் பிறரைப் பாதுகாக்க முகமூடியை அணியுங்கள். அங்காடி (ஷாப்பிங்) மையங்கள், பொது போக்குவரத்து, வழிபாட்டுத் தலங்கள் போன்ற சில பகுதிகளில் நீங்கள் முகமூடி அணியவில்லை என்றால், உங்களுக்கு $ 200 அபராதம் விதிக்கப்படலாம்.

காய்ச்சல், இருமல், புண் / அரிப்புணர்ச்சி கொண்ட தொண்டை, மூச்சுத் திணறல், மூக்கு ஒழுகுதல், சுவை அல்லது வாசனை இழப்பு போன்ற ஏதேனும் COVID-19 அறிகுறிகள் இருந்தால் தயவுசெய்து சோதித்துப் பார்க்கவும். உங்களுடைய சோதனை முடிவை நீங்கள் அறியும் வரை சுயமாகத் தனிமைப்படுத்தவும். மேலும், உங்களுக்கு உடல்நிலை சரியில்லை எனில் தயவுசெய்து வேலைக்குச் செல்ல வேண்டாம்.

கம்பலாந்து உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள சோதனைச் சிகிச்சையகங்கள் பின்வருனவற்றை உள்ளடக்கியிருக்கின்றது:

**மெர்ரிலேண்ட்ஸில் இருக்கும் வாகனத்திலிருந்து கீழிறங்காமலே சேவை பெறக்கூடிய சிகிச்சையகம்**
பர்னெட் தெரு மற்றும் மெர்ரிலேண்ட்ஸ் சாலையின் மூலையில், மெர்ரிலேண்ட்ஸ்: ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்

**ஆபர்ன் சமூக சுகாதார மையத்தில் இருக்கும் வாகனத்திலிருந்து கீழிறங்காமலே சேவை பெறக்கூடிய சிகிச்சையகம்**
நோர்வால் தெரு, ஆபர்ன்: காலை 8.30 முதல் மாலை 4 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை திறந்திருக்கும்

**ஆபர்னில் இருக்கும் வாகனத்திலிருந்து கீழிறங்காமலே சேவை பெறக்கூடிய சிகிச்சையகம்**
48 பூரியா தெரு, ஆபர்ன்: திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை
2021 ஜனவரி 8 ம் தேதி வரை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்

**ஸ்மித்ஃபீல்டிலுள்ள வாகனத்திலிருந்து கீழிறங்காமலே சேவை பெறக்கூடிய சிகிச்சையகம்**
63 லாங் தெரு, ஸ்மித்பீல்ட்: காலை 7 முதல் –மாலை 3 மணி வரை , திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை திறந்திருக்கும்

எல்லா வயதினரும் வரவேற்கப்படுகிறார்கள். முன்பதிவு அல்லது பொது மருத்துவரின் பரிந்துரை தேவையில்லை. சோதனை இலவசம். மருத்துவ அட்டை தேவையில்லை.

ஒரு சோதனைச் சிகிச்சையகத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது குறித்த தகவலுக்கு:
**www.nsw.gov.au/covid-19/how-to-protect-yourself-and-others/clinics** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

எங்களுடைய குடியிருப்பாளர்கள் பலர் ஆங்கிலம் பேசாத பின்னணியைச் சேர்ந்தவர்கள். உதவி தேவைப்படும் ஒருவரை நீங்கள் அறிந்திருந்தால், அவர்கள் ஒரு நண்பராகவோ அல்லது உறவினராகவோ இருக்கலாம், தயவுசெய்து சோதனைக்கு உட்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை அவர்களுக்குக் கூறவும் அத்துடன் அவர்களை சோதனை செய்யும்படி ஊக்குவிக்கவும்.

தகவல்களைப் புரிந்துகொள்ள உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்துரைக்கும் சேவையை 131 450 இல் தொடர்பு கொள்ளவும் அல்லது 02 8757 9000 என்ற எண்ணில் சபையை அழைக்கவும்.

பாதுகாப்பாகவும் நலமாகவும் இருங்கள்.

தங்கள் உண்மையுள்ள

சபை உறுப்பினர் ஸ்டீவ் கிறிஸ்டோ
நகரத் தலைவர்

**கவுன்சிலர் ஸ்டீவ் கிறிஸ்டோ | கம்பலாந்திற்கான நகரத் தலைவர் | கம்பலாந்து நகர சபை**
16 Memorial Avenue, PO Box 42, Merrylands NSW 2160
**எம்** 0419 651 187 **மின்னஞ்சல்** Steve.Christou@cumberland.nsw.gov.au
Mayor Steve Christou, Cumberland City Council